செ.கு. எண் : 262

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 16.12.2011

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கம்பைநல்லூர் தரப்பு, கெலவள்ளி கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பேப்பர் மில்லில் இன்று (16.12.2011) காலை பாய்லரை சுத்தம் செய்த போது ஏற்பட்ட வாயு கசிவின் காரணமாக கே.ஈச்சம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமலிங்கம் என்பவரின் மகன் கதிரவன் மற்றும் கம்பைநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் விஸ்வநாதன் ஆகிய இருவரும் மூச்சுத் திணறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விபத்தில் இரண்டு பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இருவருக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், தருமபுரி மற்றும் சேலம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9